தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 – 6611302
நிகரி: 0422 – 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 11-2-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## பூவன், கற்பூரவள்ளி மற்றும் நேந்திரன் வாழைக்கு நிலையான விலை இருக்கும்

வாழையின் விலை முன்னறிவிப்பை விவசாயிகளுக்கு தெரிவிப்பதற்கு ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கும் வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் முக்கிய வாழை ரகங்களான பூவன், கற்பூரவள்ளி மற்றும் நேந்திரன் வாழையின் விலை முன்னறிவிப்புகளை வெளியிடுகின்றது.

**பூவன்**

தமிழ்நாடு மற்றும் கேரளா மாநிலங்களில் முக்கிய வாழை ரகமாக பூவன் பழங்கள் மற்றும் இலைகளுக்காக பயிரிடப்படுகிறது. இந்து கோயில்களில் வழிபாடுகளுக்கு மிகவும் உகந்ததாக கருதப்படுகிறது. பூவன் உற்பத்தியில் தமிழ்நாடு முன்னணி வகிக்கின்றது.

தற்போது கோயம்புத்தூர், காந்திபார்க்கில் உள்ள குமரன் வாழை தரகு சந்தையில் வழக்கமான வரத்து காணப்படுகின்றது. பொதுவாக பூவன் வாழையின் விலை பண்டிகை காலங்களில் அதிகமாகவும் மற்ற மாதங்களில் நிலையாகவும் இருக்கும். தற்போது பூவன் வாழையின் மொத்த தரகு சந்தை விலை கிலோவிற்கு ரூபாய் 22 ஆக உள்ளது.

**கற்பூரவள்ளி**

தற்போது கோயம்புத்தூர், காந்திபார்க்கில் உள்ள குமரன் வாழை தரகு சந்தையில் வழக்கமான வரத்து காணப்படுகின்றது. மற்ற வாழை ரகங்களைக் காட்டிலும் கற்பூரவள்ளி வாழை அதிக சர்க்கரை அளவு கொண்டது. அதனால் கேரள வியாபாரிகளிடம் நேந்திரன் வாழைக்கு அடுத்த விருப்பமாக உள்ளது. இந்து கோயில்களில் பஞ்சாமிருதம் தயார் செய்வதற்கு உகந்ததாக உள்ளது. தற்போது கற்பூரவள்ளி வாழையின் மொத்த தரகு சந்தை விலை கிலோவிற்கு ரூபாய் 25 ஆக உள்ளது.

**நேந்திரன்**

கேரள மாநிலத்தின் முன்னுரிமை ரகமாக நேந்திரன் உள்ளது. இது பழம் மற்றும் சிப்ஸ் உற்பத்திக்கு உகந்ததாகும். தமிழ்நாட்டில் நேந்திரன் சாகுபடியானது கேரள நுகர்வோர் தேவையை மையப்படுத்தி சாகுபடி செய்யப்படுகிறது. ஓணம் மற்றும் மகர ஜோதி காலங்களில் நேந்திரன் விலை அதிகபட்சமாக இருக்கும். கேரளாவில் மகர ஜோதி முடிவடைந்தவுடன் புனித யாத்திரை மேற்கொள்வது நிறைவு பெறுவதால் இவற்றின் தேவை குறைந்து காணப்படுகின்றது. அதனால் விலை குறைந்து அடுத்த பண்டிகை காலமான விஷு (சித்திரை முதல் நாள்) வரையில் நிலையான விலையில் இருக்கும்.

கோயம்புத்தூர் மொத்த சந்தையில் எதிர்வரும் மார்ச் – ஏப்ரல், 2015 மாதங்களில் விலை நிலவரம் பற்றி விவசாயிகள் அறிந்து கொள்ள ஏதுவாக கடந்த 12 வருடங்களின் பூவன் மற்றும் கற்பூரவள்ளி, கடந்த ஏழு வருடங்களின் நேந்திரன் ரகங்களின் கோயம்புத்தூர் உழவர் சந்தையில் நிலவிய விலை விவரங்கள் ஆய்வு மற்றும் வர்த்தக ஆய்வுகள் கோயம்புத்தூர் மொத்த தரகு சந்தையில் மேற்கொள்ளப்பட்டன.

ஏப்ரல், 2015 மாதத்தில் சித்திரை முதல் நாள் கேரள மாநிலத்தில் விஷு பண்டிகையாகவும், தமிழ்நாட்டில், தமிழ் வருடப் பிறப்பாகவும் கொண்டாடப்படுகிறது. இந்த குறிப்பிட்ட வாரத்தில் பூவன் மற்றும் நேந்திரன் விலை அதிகமாக இருக்கும். மேலும் இதர காலங்களில் நிலையான விலையில் இருக்கும்.

வர்த்தக மூலங்கள் மற்றும் விலை ஆய்வுகளின் முடிவின்படி பூவன், கற்பூரவள்ளி மற்றும் நேந்திரன் வாழையின் விலை எதிர்வரும் மார்ச் – ஏப்ரல், 2015 மாதங்களில் நிலையாக இருக்கும். சராசரி பண்ணை விலையானது அறுவடை சமயத்தில் பூவன் வாழை கிலோவிற்கு ரூபாய் 15 முதல் 17 வரையும், கற்பூரவள்ளி மற்றும் நேந்திரன் கிலோவிற்கு ரூபாய் 18 முதல் 20 வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இதன் பொருட்டு விவசாயிகள் அறுவடைக்கு முன்பு சந்தை விலை நிலவரங்களை அறிந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

<u>மேலும் விவரங்களுக்குதொடர்பு கொள்ள</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422 -2431405

<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்,
பழப்பயிர்கள் துறை,
தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-6611269

மக்கள் தொடர்பு அலுவலர்